# இஸ்லாமியக் கலாச்சாரத்தின் கல்விப்பணி

அல்லாஹ் தஆலா திருக்ஃகுர்ஆனில் முதன்முதலாக இறக்கியருளிய வசனம் கல்வி கற்பதன் முக்கியத்துவம் மற்றும் அதன் மேன்மையை நிலை நாட்டுவதாகவே உள்ளது. அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

اقْرَأْ بِاسْمِ رَبِّكَ الَّذِي خَلَقَ ﴿١﴾ خَلَقَ الْإِنسَانَ مِنْ عَلَقٍ ﴿٢﴾ اقْرَأْ وَرَبُّكَ الْأَكْرَمُ ﴿٣﴾ الَّذِي عَلَّمَ بِالْقَلَمِ ﴿٤﴾ عَلَّمَ الْإِنسَانَ

مَا لَمْ يَعْلَمْ ﴿٥﴾ العلق 1 ز )

*பொருள்: ஓதுவீராக, (நபியே) படைத்த உம் இறைவனின் திருப்பெயர் கொண்டு. (உறைந்த) இரத்தக்கட்டியிலிருந்து மனிதனை அவன் படைத்தான். ஓதுவீராக, மேலும், உம் இறைவன் எத்தகைய மாபெரும் அருட்கொடையாளன் எனில், அவனே எழுதுகோலின் மூலம் கற்றுக்கொடுத்தான், மனிதனுக்கு, அவன் அறியாதிருந்தவற்றையெல்லாம் கற்றுக்கொடுத்தான். (அல் அலஃக்:1-5)*

يَرْفَعِ اللَّهُ الَّذِينَ آمَنُوا مِنكُمْ وَالَّذِينَ أُوتُوا الْعِلْمَ دَرَجَاتٍ ﴿١١﴾ المجادلة 11 )

*பொருள்: உங்களில் எவர் இறைநம்பிக்கை கொண்டிருக்கின்றீர்களோ மற்றும் எவர்களுக்கு ஞானம் வழங்கப்பட்டிருக்கின்றதோ அவர்களுக்கு அல்லாஹ் உயர்ந்த பதவிகளை வழங்குவான் (அல் முஜாதலஹ்:11)*

இறைத்தூதர் ﷺ அவர்கள் கல்வி கற்பதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் சிறப்புக்களைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்கள்:

مَنْ سَلَكَ طَرِيْقاً يَلْتَمِسُ فِيْهِ عِلْماً سَهَّلَ اللهُ لَهُ طَرِيْقاً إِلَى الْجَنَّةِ البخاري،أبو داؤد،الترمذي،ابن ماجه )

*பொருள்: எவர் ஒருவர் கல்வி கற்பதற்காக ஒரு வழியில் பயணத்தை மேற்கொள்கின்றாறோ, அதனுடைய சிறப்பின் காரணமாக, அல்லாஹ் தஆலா சுவர்க்கத்திற்கான பாதையை அவருக்காக எளிதாக்கித் தருகின்றான் (புக்ஹாரி, அபூ தாவூத், திர்மிதி, இப்னு மாஜா)*

இறைத்தூதர் ﷺ அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்:

طلب العِلْمِ فَرِيْضَةٌ عَلَى كُلِّ مُسْلِمٍ ابن ماجه )

www.uzairfalahi.com

*பொருள்: கல்விகற்பது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும் (இப்னு மாஜா).*

*பத்ரு போரில் இணை வைப்பாளர்கள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டபோது அவர்களில் ஒவ்வொருவரும் பத்து நபித்தோழர்களுக்கு எழுதப்படிக்கக் கற்றுக்கொடுத்தால் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இறைத்தூதர் ﷺ அவர்கள் அவர்களை விடுதலை செய் துள்ளார்கள். முஸ்லிம்கள் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் கல்வி மற்றும் அறிவாற்றலைப் பெறுவதற்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர். இதன் காரணமாகவே, அவர்கள் ஒரு மகத்தான கலாச்சார மரபினை உலகுக்கு அளித்துள்ளனர். இதன் மூலம் அவர்களுடைய நாகரீக வளர்ச்சி மற்றும் அனைத்துத் துறைகளிலும் அவர்களுடைய வளர்ச்சி மற்றும் மேன்மை யினை உணர முடிகின்றது. இஸ்லாம் கல்வி கற்பதற்கான அனைத்து ஆதாரங்களுக்கும் முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. அவற்றுள் சில கீழ்வருமாறு:*

## பள்ளிவாசல்கள் (மஸ்ஜித்)

*பள்ளிவாசல்தான் முதன் முதலான கல்விக்கூடமாக விளங்கியது, அவையே முஸ்லிம்களுக்காக கல்வி மற்றும் அறிவாற்றலை மேம்படுத்திக்கொள்ளும் ஒளிவிளக்காகத் திகழ்ந்தன. இறைத்தூதர் ﷺ அவர்கள் மதீனா முனவ்வரஹ் விற்கு ஹிஜ்ரத் செய்து வந்த பின்பு முதன்முதலாகப் பள்ளிவாசலைக் கட்டி னார்கள். இதன் மூலம் முஸ்லிம்களுடைய வாழ்க்கையில் பள்ளிவாசல் களின் முக்கியத்துவத்தினை அறியமுடிகின்றது. கலாச்சாரத்தினை வடிவ மைப்பதிலும் அதனை உயர்வு மற்றும் உச்சக்கட்டத்திற்குக் கொண்டு செல் வதிலும் உதவியாக இருந்தது பள்ளிவாசல்களே முதற்கட்டமாக அமைந் தன என்பதை முஸ்லிம்கள் அறிந்துகொள்ளவேண்டும். பள்ளிவாசல்கள் முஸ்லிம்கள் ஒன்று சேரும் அரங்கமாகவும் இருந்தன. அவர்கள் அங்கே ஒன்றுகூடி மார்க்க மற்றும் உலக விஷயங்களைப்பற்றியும் கருத்து பரிமாற் றங்களைச் செய்துவந்தனர். அங்கே இறைவனை தியானிப்பதற்காகப் பல குழுக்களாக அமர்ந்தும், முஸ்லிம்கள், சிறுவர்களும் பெரியவர்களும், திருக்ஃகுர்ஆன் மற்றும் மார்க்க விஷயங்களைக் கற்றுக்கொண்டும் கற்றுக் கொடுத்தும் வந்தனர்.*

www.uzairfalahi.com

இஸ்லாமியக் கலாச்சாரம் வடிவமைக்கப்படுவதிலும் அதன் வளர்ச்சியிலும் முக்கியமான பங்கினை ஆற்றிய பள்ளிவாசல்களில் முக்கியமானவை மக்காஹ் முகர்ரமஹ்வில் மஸ்ஜிதுல் ஹராம், மதீனா முனவ்வரஹ்வில் மஸ்ஜிதுன் நபவி, பாலஸ்தீனத்தில் மஸ்ஜிதுல் அஃக்ஸா, டமாஸ்கஸில் மஸ்ஜிதுல் உமவி, எகிப்தில் மஸ்ஜிது ஃஅம்ருப்னுல் ஃஆஸ் மற்றும் மஸ்ஜிதுல் அஜஸ்ஹர், துனிசியாலில் மஸ்ஜிது ஃகைரவான் மற்றும் இவற்றைத்தவிர எண்ணற்ற பள்ளிவாசல்களும் இஸ்லாத்திற்கான சேவைகளை ஆற்றி முஸ்லிம்களின் கலாச்சாரம் தலைசிறந்து விளங்கவும் உயர்வினை அடையவும் பங்களித்துள்ளதோடு முஸ்லிம்களைத் தலைமுறை தலைமுறையாக நெறிப்படுத்தியும் வந்துள்ளன. இதன் மூலம் கலாச்சார வடிவமைப்பு மற்றும் முன்னேற்றத்தில் பள்ளிவாசல்களின் பங்கு மிகவும் நெருங்கிய தொடர்பினையுடையதாக இருந்தது என்பதை அறியமுடிகிறது.

## மக்தபுகள்

மக்தபு என்றால் எழுதப் படிக்கக் கற்றுக்கொடுக்கப்படும் மற்றும் திருக் ஃகுர்ஆன் கற்பிக்கப்படும் கல்விக்கூடங்களாகும். இந்த மக்தபுகளில் திருக் ஃகுர்அன் கற்பிக்கும் அறிஞர்களின் ஒரு குழு இருக்கும், அவர்கள் சிறுவர்களின் கல்வி, அவர்களின் வளர்ப்பு மற்றும் வழிநடத்தும் பொறுப்பினையுடையவர்களாக இருந்தனர். மக்கள் தொகை அதிகரிக்கத்தொடங்கிய போது பள்ளிவாசல்களில் இடப்பற்றாக்குறை ஏற்பட்ட நிலையில் இந்த மக்தபுகள் கல்விப் பணியின் முதற்கட்ட கல்விக்கூடங்களாகவும் அமைப்புகளாகவும் விளங்கின. இந்த மக்தபுகள் அனைத்து முஸ்லிம் நாடுகளிலும் பரவின. இவற்றின் மூலம் கல்விப்பணிகள் மிகுந்த வளர்ச்சியினைக் கண்டன.

www.bizarfalahi.com

## நூலகங்கள்

முஸ்லிம் அரசர்கள் மற்றும் ஆட்சியாளர்கள் பல்வேறு கலைகள் மற்றும் அறிவியல் சார்ந்த பயனுள்ள எண்ணற்ற நூல்களைக்கொண்ட பல்வேறு நூலகங்களை நிறுவினர். பக்தாத், டமஸ்கஸ் மற்றும் கெய்ரோ ஆகிய நகரங்கள் அந்நாட்டு ஆட்சியாளர்களால் நிறுவப்பட்ட உலகப்புகழ்பெற்ற நூலகங்களின் காரணமாகவே பிரபலமாயின. இந்த நூலகங்களில் இஸ்லாமியக் கலைகள் மற்றும் இலக்கியங்களின் அனைத்துத் தலைப்புகளி

லும் ஏராளமான மூல நூல்களும் பார்வை நூல்களும் சேகரிக்கப்பட்டிருந் தன. இந்த நூலகங்களிலெல்லாம் மிகவும் பிரசித்திப்பெற்றது **தாருல் ஹிக்மஹ்** எனப்படும் நூலகம் மற்றும் ஆய்வகமாகும். இது ஃபாதிமியர் களுடைய ஆட்சிக்காலத்தில் ஹாகிம் பிஅம்ரில்லாஹ் எனும் ஃகலீஃபா வுடைய கட்டளையால் ஹிஜ்ரி 395 ல் நிறுவப்பட்டது. இங்கே எண்ணற்ற நூல்கள் சேகரிக்கப்பட்டன. இந்நூலகத்தில் பல அறைகளும், மாண வர்கள், ஆய்வாளர்களுக்காக வகுப்புகளும் நடத்தப்பட்டன. வாசகர்களுக் காக சிறப்பு அறைகளும் இருந்தன, அவை அலங்கரிக்கப்பட்டும் இருந் தன. மாணவர்கள், ஆய்வாளர்களின் சேவைக்காக பணியாளர்கள் நியமிக் கப்பட்டிருந்தனர். நூல்களின் பட்டியல்கள் வைக்கப்பட்டிருந்தன, அதிலி ருந்து ஆய்வாளர்கள் எளிதாகவே தேவையான நூல்களைப் பெறும் வசதி இருந்தது. அங்கே நூல்கள் பார்வைக்காக எடுத்துச்செல்லும் வசதியும் செய்யப்பட்டிருந்தது.

### கல்விக்கூடங்கள்

எண்ணற்றக் கல்விக்கூடங்கள் (பள்ளிக்கூடங்கள்) நிறுவப்பட்டன, அவற் றுள் சில கல்விக்கூடங்கள் அட்சியாளர்களுடைய குழந்தைகளுக்காக ஒதுக் கப்பட்டிருந்தன. இதற்கான காரணம், அங்கே பயிலும் மாணவர்களுக்குப் பல்வேறு பதவிகள் மற்றும் நிர்வாகப்பொறுப்புக்களை கையாளும் வகை யில் சிறப்புப் பயிற்சி அளிக்கவேண்டும் என்பதாகும். சில பள்ளிக்கூடங் கள் பொதுவானவையாகவும் இருந்தன. முஸ்லிம் மாணவர்களுக்கு பல் வேறு கலைகளும் இலக்கியங்களும் கற்பிக்கப்பட்டு வந்தன.

www.uzairalahi.com

ஆட்சியாளர்கள் பலரும் தங்களுடைய ஆட்சிக்காலத்தில் மிகவும் கம்பீர மான பொலிவுடனான பள்ளிக்கூடங்களைக் கட்டினர். பக்தாத், அஸ்ஃப ஹான், பஸரஹ், மௌஸில் ஆகிய நகரங்களில் இந்த மத்ரசாக்கள் நிறுவப்பட்டன. இவற்றுள் மிகப் பிரபலமான மத்ரசா நூருத்தீன் மஹ்மூத் ஜ்ஸங்கி மத்ரசாவாகும். இது டமஸ்கஸஸ் நகருக்கு அருகில் அமைந்தி ருந்தது. இது மத்ரசா நூரிய்யா என்ற பெயரால் பிரபலமடைந்திருந்தது. இது ஹிஜ்ரி 563 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. இது மிகவும் விசா லமான பரப்பில் அமைந்திருந்தது. இங்கே எண்ணற்ற வகுப்பறைகள், பள்ளிவாசல், ஆசிரியர்களுக்காக இரண்டு அறைகள், மத்ரசா பணியாளர் களுக்காகத் தங்குமிடங்கள் குளியலறைகள், கழிவறைகளும் இருந்தன.

மிகவும் கம்பீரமான மாடங்கள் மற்றும் அழகு அலங்கார வேலைகளின் காரணமாக இது தனிச்சிறப்பினைப் பெற்றிருந்தது. இந்த மத்ரசாவின் கல்வித்திறனும் உயர்வானதாக இருந்தது.

இந்த மத்ரசா மாபெரும் அறிஞர்களை உருவாக்கியுள்ளது. மாணவர்களின் அறிவுத்திறன் மற்றும் அறிவாற்றலை அறிந்துகொள்வதற்காக முறையாகத் தேர்வுகள் நடத்தப்பட்டன. மாணவர்களுடைய திறமைகளின் அடிப்படையில் அவர்களுக்கு வழிகாட்டுதல்கள் அளிக்கப்பட்டன. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே மிகவும் நெருங்கிய வலுவான தொடர்பு இருந்தது. மாணவர்களுக்கு, குறிப்பாகக் கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு ஊக்கத்தொகையும் மற்ற வசதிகளும் செய்து தரப்பட்டன. விளையாட்டுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பொழுதுபோக்கு ஏற்பாடுகளும் சுற்றுலா வசதிகளும் செய்து தரப்பட்டன. மாணவர்களுடைய ஆரோக்கியம் மற்றும் அறிவுத்திறன் ஆகியவற்றை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. இத்துடன், பெண் குழந்தைகளின் கல்விக்கான ஏற்பாடும் செய்யப்பட்டது. அவர்களுக்கும் மற்ற மாணவர்களுக்கு அளிக்கப்படுவதுபோன்றே கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது.

* * *

www.uzairfalahi.com